## DEPOSITION OF WITNESS
## IN THE COURT OF DISTRICT MUNSIF, SATHANKULAM

| P.W.4 | பெயர் : தங்கராஜன்<br>த/பெ : ஞானராஜ் | OS.No. 38/2023 | 26.06.2025 |
|---|---|---|---|

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.4 ன் குறுக்கு விசாரணை)

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் CSI மதத்தை சார்ந்தவர் என்றால் சரிதான். இதற்கு முன்பு நான் டயோசிஸில் பதவியில் இருந்துள்ளேனா என்றால் இருந்துள்ளேன். 1ம் பிரதிவாதி TDTA பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்தாரா என்றால் பணிபுரிந்தார். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் 1ம் பிரதிவாதி பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்று கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். 1ம் பிரதிவாதி எப்போது பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

2. 1ம் பிரதிவாதி தற்போது பணியில் உள்ளாரா என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 12.06.2025 அன்று நான் நீதிமன்றத்திற்கு வந்து முதல் விசாரணை சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான். மேற்படி தேதியில் 1ம் பிரதிவாதி பணிபுரிந்து வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி எப்போது பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ள விபரத்தை எப்படி தெரிந்து கொண்டேன் என்றால் சமூக வலைதளங்களில் 1ம் பிரதிவாதியின் இடைநீக்க உத்தரவை நான் பார்த்தேன்.

3. நான் சார்ந்திருக்கும் சங்கத்தின் வலைதளங்களில் 1ம் பிரதிவாதியின் இடைநீக்க உத்தவு வந்ததா என்றால் இல்லை. எந்த வலைதளத்தில் வந்தது என்றால் பொதுவான வலைதளம், அந்த வலைதளத்தின் பெயர் தற்போது ஞாபகம் இல்லை. 1ம் பிரதிவாதி தற்போது எங்கு வேலை பார்க்கிறார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதியை கேவலப்படுத்தவேண்டும் என்ற நோக்கில் அவர் வேலை பார்க்கிறார் என்று தெரிந்தும், எனது முதல்

விசாரணையில் வேண்டும் என்றே இடைநீக்கம் செய்ததாக வாதியின் தூண்டுதலின்பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. நான் தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் சங்கத்தில் வாதி செயலாளராகவும், நான் பொருளாலராகவும் தற்போது பதவி வகித்து வருகிறோம் என்றால் நான் தற்போது எந்த ஒரு பதவியிலும் இல்லை. நான் சாத்தான்குளம் ஒன்றியம், பனைவிளை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் ஆசிரியராக பணியாற்றி வருகிறேன் என்றால் சரிதான். நான் விடுமுறை எடுத்துதான் இன்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.

5. பனைவிளையை சேர்ந்த சுந்தரவேல் என்பவர் என் பள்ளியில் உயர் அதிகாரியிடம் நான் பணி சரியாக செய்யவில்லை என்று புகார் கொடுத்துள்ளார் என்றால் இல்லை. (இவ்வழக்கிற்கும் சுந்தரவேலுக்கும் சம்மந்தம் இல்லை என்றும், இந்த வழக்கிற்கு அவர் 3ம் நபர் என்பதால் மேற்படி கேள்வியை கேட்பதற்கு வாதி தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது) சாத்தான்குளம் ஒன்றியம், பனைவிளை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் நான் தலைமையாசிரியராக பொறுப்பெடுக்கும்போது சுமார் 70 பேர் படித்தார்கள் என்றால் இல்லை. தற்போது மேற்படி பள்ளியில் 30 மாணவர்கள்தான் பயின்று வருகிறார்கள் என்றால் இல்லை. 2ம் பிரதிவாதிக்கு இடைச்சன்விளை சொந்த ஊர் என்றால் எனக்கு தெரியாது.

6. நான் வேலைபார்க்கும் பள்ளியும் இடைச்சன்விளை ஊரும் அரசூர் பஞ்சாயத்தை சேர்ந்தது என்றால் சரிதான். பனைவிளை ராமசாமி மகன் சுந்தரவேல் பிரதிவாதிகளின் தூண்டுதலின்பேரில் என் மீது புகார் கொடுத்துள்ளார் என்று தவறாக புரிந்து கொண்டு பிரதிவாதிகள் 1ம் வாதி பெயரை குறிப்பிட்டு விளம்பர போர்டு வைத்துள்ளதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விளம்பர போர்டு சம்மந்தமாக வாதி சாத்தான்குளம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

 SIVA RAJESH M Digitally signed by SIVA RAJESH M Date: 2025.06.26 22:21:50 +0530 

7. நான் சாத்தான்குளம் காவல் நிலையம் சென்றேனா என்றால் சென்றேன். எந்த தேதியில் சென்றேன் என்றால் 02.09.2023 அன்று மாலை 05.30 மணியில் நான் சென்றேன். போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்றால் சரிதான். அருள்ராஜை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். போலீசாரிடம் அருள்ராஜ் என்ன வாக்குமூலம் கொடுத்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

8. பிரதிவாதிகள் அன்றைய தினம் காவல் நிலையம் வந்திருந்தார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. விளம்பர போர்டு வைத்த விபரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் 02.09.2023 அன்று மாலை தெரியும். 02.09.2023 அன்று மாலை வாதியை தற்செயலாக சாத்தான்குளம் வட்டார கல்வி அலுவலகம் அருகே வைத்து பார்த்தேன். விளம்பர போர்டு பற்றி நான்தான் வாதியிடம் கூறினேனா என்றால் இல்லை. வாதி கூறிதான் மேற்படி விளம்பர போர்டு பற்றி எனக்கு தெரியும் என்றால் இல்லை, நான் விளம்பர போர்டை நேரடியாக பார்த்தேன்.

9. விளம்பர போர்டு தன்மை எவ்வாறு இருந்தது என்றால் இரும்பு பிரேமில் விளம்பர பலகை வைக்கப்பட்டிருந்தது. பிரதிவாதிகள் வாதியை அவமானப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் எந்த விளம்பர பலகையும் வைக்கவில்லை என்றால் சரியல்ல. நானும் வாதியும் கூட்டாக சேர்ந்து நாங்களே பிரதிவாதிகளின் பெயரை போட்டு நாங்கள்தான் விளம்பர பலகையை வைத்தோம் என்றால் சரியல்ல. அதனால்தான் நான் முன்னுக்குபின்னாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

10. நானும், வாதியும் சங்கத்தை பயன்படுத்தி உயர் அதிகாரிகளை மிரட்டி வருகிறோம் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் வாதி பற்றி அவதூறாக வாசகங்கள் எழுதி வைத்துள்ளார்கள் என்றும், அதை நான் பார்த்ததாக கூறுவதும் பொய் என்றால் சரியல்ல. விளம்பர பலகையில் உள்ள வாசகங்களுக்கும்

பிரதிவாதிகளுக்கும் எவ்வித சம்மந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் சங்கம் வைத்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

11. 2ம் பிரதிவாதி TDTA பள்ளியில் தலைமையாசிரியராக வேலை பார்த்து வருகிறார் என்றும், அவர் மீது கூறியுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் பொய்யானவை என்று நிரூபித்து அவர் தன்னுடைய தான் வேலை பார்த்து வரும் பள்ளி பள்ளி நிர்வாகத்திடம் முறையான ஆணை பெற்று தங்கு தடையின்றி இன்று வரை வேலை பார்த்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் விளம்பர பலகையை எதுவும் பார்த்ததில்லை என்பதால்தான் காவல் நிலையத்தில் எந்தவிதமான வாக்குமூலத்தையும் அளிக்கவில்லை என்றால் சரியல்ல.

12. அன்றைய தேதியில் விளம்பர பலகையால் சுற்று வட்டார பகுதியில் பரபரப்பாக இருந்தது என்று எனது முதல் விசாரணையில் நான் பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டது.

SIVA RAJESH M Digitally signed by SIVA RAJESH M
Date: 2025.06.26 22:22:02 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தான்குளம்.